அக்கரைப்பற்று மாநகர சபை
அம்பாறை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 05 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 21 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 21 திகதி நகர சபையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அக்கரைப்பற்று மாநகர சபை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து காசுப்பாய்சல் கூற்று சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும் காசுப்பாய்சல் கூற்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டில் பொது நூலகத்திற்கு மாநகர சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 400,000 பெறுமதியான 1,077 எண்ணிக்கையான நூல்கள் நூலகப்புத்தகங்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீள்நிர்மான வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2014 டிசம்பர் 15ஆம் திகதி மாநகரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட கட்டிடத் தொகுதி தொடர்பாக ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 500,000 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகர சபைக்குச் சொந்தமான 04 தொலைநகல் இயந்திரங்கள், 03 மடிகணனிகள், 06 நீர் இறைக்கும் இயந்திரங்கள், 03 ஓவர்ஹெட் புரொஜக்டர் (Overhead Projectors) என்பவற்றின் பெறுமதி மதிக்கப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு சபையின் பெக்கோ இயந்திரம் வாடகைக்கு வழங்கப்பட்டு 19 மணித்தியாலயங்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காகப் பெறவேண்டிய ரூபா 48,450 தொகையான வாடகை வருமானம் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரண்டு சேமிப்பு வைப்பு கணக்குகளின் மீதியானது ரூபா 70,682 ஆகக் காணப்பட்டபோதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 67,598 கணக்கிடப்பட்டமையால் வங்கிமீதியானது ரூபா 3,084 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புப் பதிவேட்டின் படி ரூபா 36,000 பெறுமதியான 180 திண்மக்கழிவு சேதனப்பசளை பைகள் இருப்பின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) மாநகரசபையின் ரூபா 14,305,446 தொகையான நிலையான வைப்புகள் மீது மீளாய்வாண்டிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 475,805 மதிப்பீட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபைக்கு உரித்தான 09 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறப்பட வேண்டிய கணக்குகள்

(அ) சனசமூக நிலையத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத்தொகை ரூபா 4,800 கடந்த 5 வருட காலமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பதவி வறிதாக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 17,200 கடன் மீதியை அறவிடுவதற்கு 2015 யூலை 24 வரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| காணி கட்டிடம் | 150,369,889 | நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| தளபாடங்களும் மற்றும் பொருத்துக்களும் | 3,798,263 | |
| வாகனங்களும் வண்டிகளும் | 6,440,748 | மெய்மையாய்வு அறிக்கைகள் |
| நூலக புத்தகங்கள் | 2,069,825 | |

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் | |
| அத்தியாயம் 252 பிரிவு 218 | ஆணையாளரினால் ஒவ்வொரு நிதி ஆண்டிற்காகவும் அவரின் நிர்வாகம் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய விபரமான அறிக்கை 2014 ஆண்டு தொடர்பாக அவரினால் தயாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை ஜனநாயகக் சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி 137 | மாநகர சபையின் ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் பத்திரிகை விளம்பர கட்டணத்திற்காக ரூபா 92,736 செலவு செய்யப்பட்டுள்ளது |
| (ii) நி.பி 138 | மீளாய்வாண்டில் 08 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் கூட்டுமொத்தம் ரூபா 87,340 சான்று படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி 452 (I) | மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டுகளிலும் அனுப்பப்பட்ட 07 கணக்காய்வு ஐயவினாக்கள் கணக்காய்வு ஐயவினா பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி 571 | 02 தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலத்துக்கு மேலாக ரூபா 989,162 பெறுமதியான 36 மீளச்செலுத்த வேண்டிய காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம். | சபையினால் பல்வேறு ஒப்பந்தங்கள் மீது 2012 ஆம் ஆண்டும் அதற்கு முற்பட்ட காலங்களுக்காகவும் அறவீடு செய்யப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 696,670 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு 2015 யூலை 24 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1992 ஆகஸ்ட் 19ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க பொதுநிர்வாகச் சுற்றுநிருபம். | சபையினால் பயன்படுத்தப்படும் 10 வாகனங்களில் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2014 திசெம்பர் 26ஆம் திகதிய 08/2014ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கைக் கடிதம். | மீளாய்வாண்டில் சபையினால் 23 மோட்டார் வாகனங்களுக்கு காப்புறுதி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு
---------------------

2.1 நிதி விளைவுகள்
----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி சபையின் 2014 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டின் நிதிப்பெறுபேறானது ரூபா 17,592,793 தொகையான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானத்தை விளைவித்திருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 12,545,325 ஆக இருந்தது. இது நிதிப்பெறுபேற்றில் ரூபா 5,047,468 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்
-------------------------------------------

2.2.1 வீதவரிகள்
-------------------

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252(1) (ஆ) பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட 12,872 குடியிருப்பாளர்களிடமிருந்து மீளாய்வாண்டில் ரூபா 10,000,000 வரியை அறவீடு செய்வதற்கு 05 வரி அறவீடு செய்வோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருந்தும் அறவிடப்பட்ட தொகை ரூபா 4,897,883 மாத்திரமாகும்.

2.2.2 உத்தரவுப்பத்திர கட்டணங்கள்
----------------------------------------------------

(அ) 1992ஆம் ஆண்டு தொடக்கம் 2013 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய பொதுச் சந்தை கடைத் தொகுதிகளுக்கான வாடகை நிலுவை ரூபா 556,607 தொகையும் பஸ் தரிப்பிட கடைத் தொகுதிக் கடைகளுக்கான வாடகை நிலுவை ரூபா 2,080,000 தொகையும், இறைச்சிக் கடைகளின் வாடகை நிலுவைகள் ரூபா 3,159,412 தொகையும், மீன் சந்தை மற்றும் பொதுச் சந்தை குத்தகை நிலுவைகள் ரூபா 1,003,920 தொகையும் உள்ளடங்களாக ரூபா 6,799,939 கூட்டு மொத்த தொகையான அறவிட வேண்டிய நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக செயலாளரினால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பிரதேச அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் 1(V) பிரிவின் படி தொலைத்தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 02 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு மீளாய்வாண்டிற்காக கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XXVIII இன் பிரிவு 1.3 இன் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தரின் வருகையும் வெளிச்செல்லும் வருகைப் பதிவேட்டில் பதியப்பட்டு கையெழுத்திடப்பட வேண்டிய போதிலும் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி தான் கடமைக்கு சமூகமளித்தமையை வருகைப் பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் இடாதிருந்த போதிலும் அவருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளங்களும் படிகளும் உள்ளடங்கலாக மொத்தம் ரூபா 630,072 வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் 2012 ஆம் ஆண்டில் நியமனம் வழங்கப்பட்ட சுகாதார தொழிலாளி, காவலாளி மற்றும் காரியாலய உதவியாளருமாகமொத்தம் 70 ஊழியர்களுக்கான வேதன ஏற்றம் அவர்களின் நியமன திகதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2001/15 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 25 க்கு மேற்பட்ட அலுவலகர்களைக் கொண்டுள்ள அலுவலகங்களின் கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 130 உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்ற மாநகர சபையால் கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை

(i) வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம்

மாநகர சபையானது மாநகர சபை எல்லைக்குள் இயங்கி வரும் 750 வியாபார நிறுவனங்களிலிருந்து ரூபா 1,500,000 தொகையான வியாபார அனுமதிப் பத்திரக்கட்டணத்தை அறவிடுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டடிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந் நிறுவனங்களிலிருந்து ரூபா 1,248,750 மட்டுமே வருமானமாக கிடைத்துள்ளது.

(ii) கடை வாடகை

மாநகர சபைக்குச் சொந்தமான மொத்தம் 96 கடைகளில் மீளாய்வாண்டில் 53 கடைகள் மட்டுமே சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்டு ரூபா 159,000 வருமானம் பெறப்பட்டிருந்தபோதிலும் ஏனைய 43 கடைகளையும் வாடகைக்கு வழங்கப்படாமையால் சபைக்கு ரூபா 129,000 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான திருத்தம் செய்து பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ள 04 உழவு இயந்திரங்கள், 02 உழவு இயந்திர இழுவைப்பெட்டிகள்,01 டபிள்கெப் வாகனம் மற்றும் 01 எக்ஸ்கவேட்டர் உள்ளடங்களாக மொத்தம் 08 வாகனங்கள் திருத்தம் செய்யப்படாது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாடற்று காணப்படுகின்றது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் சபையின் நகர்ப்புற மத்தியில் ரூபா 6,400,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 01 ஏக்கர் பரப்பான வெற்றுக்காணி பாவனைக்கு உட்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.

3.4 மனிதவள முகாமைத்துவம்

நிறைவேற்றுனர் பதவிக்கான மூன்று வெற்றிடங்களும், முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான ஐந்து வெற்றிடங்களும், சிற்றூழியர்கள் பதவிக்கான பதினொரு வெற்றிடங்களும் கடந்த 05 வருட காலமாக வெற்றிடமாக உள்ளன.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக்கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 25 சதவீதம் தொடக்கம் 123 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டுள்ளமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாடுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழ் வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான சேகரிப்பு.
(இ) பாதீட்டு கட்டுப்பாடு.
(ஈ) நிலையான சொத்துக்கள் பராமரிப்பு